பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 21 திங்கட் கிழமை 03.06.2024 கதிர் 208

# கன மழையினால் 10 பேர் உயிரிழப்பு

## மேலும் ஐவரை காணோம்



பலத்த மழையுடனான வானிலை காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஐவரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக பொது விவாதம் ஒன்று நடப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே தெரிகிறது. வடக்கு கிழக்கு சிவில் சமூகங்களின் கூட்டிணைவு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைச் சந்தித்து தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் நடத்திய பேச்சின்போது இதற்கான இணக்கம் எட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில ஜூன் 9 அன்று இந்த விவாதத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளைத்தான் செய்திருக்கிறார் என்று சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

விவாதம் நடப்பதற்கான இடம் மற்றும் நேரம் என்பன பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால், இத்தகைய ஒரு விவாதம் நடத்தப்படக்கூடாது என்றும் சுமந்திரன் இந்த விடயத்தைத் திசை திருப்பி விடுவார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். ☞ 2

## 10 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

குநாட்டின் 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

அவருடைய அறிவித்தலின்படி,

இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு, கண்டி, நுவரெலியா, கேகாலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, குருவிட்ட, அயகம, எலபாத்த, கிரியெல்ல, நிவித்திகல, கலவானை மற்றும் எஹெலியகொட ஆகிய ☞ 2

## 150 மி.மீ. மழை பெய்யலாம்

நாட்டின் பல பகுதிகளிலும் 150 மில்லிமீற்றர் வரை பலத்த மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேல், சப்ரக முவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இவ்வாறு பலத்த மழை பெய்யக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாமென கொழும்பு மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு கடற்றொழில் திணைக்களம் ☞ 2

## 4 கங்கை கரைகளையொட்டி வெள்ள அபாய எச்சரிக்கை

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக களனி, களு, கிங் மற்றும் நில்வலா கங்கைகளை சூழவுள்ள தாழ் நிலப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி களுகங்கையின் மேல்பகுதியில் கணிசமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், அடுத்த 48 மணித்தியாலங்களில் இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல, நிவித்திகல, குருவிட்ட, அயகம, எலபாத்த, இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் ☞ 8

## பொருளாதார பரிமாற்றச் சட்டத்திற்கு ஆதரவு தரக் கட்சிகளுக்கு அழைப்பு

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்தார்

பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு மாற்றுத் திட்டம் ஏதேனும் இருந்தால் முன்வைக்கவும். அன்றேல் பொருளாதார பரிமாற்றச் சட்டத்திற்கு ஆதரவு வழங்குங்கள் என்று அனைத்துக் கட்சிகளிடத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

4 வருடங்களுக்கு முன்னர் நாம் ஒரு தலைப்பின் அடிப்படையில்தான் தேர்தலுக்கு முகங்கொடுத்தோம். இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. 2020 வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வரி குறைக்கப்பட்டதால் வருமானம் வீழ்ச்சியடைகிறது. அந்நியச் செலாவணி ☞ 8

## தயார் நிலையில் ஹெலிகள்

இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டோரை மீட்பதற்காக விமானப் படையின் பெல்- 212 ரக ஹெலிகளும் பெல் -414 விமானமொன்றும் தயார்நிலையிலுள்ளதாக விமானப்படை பேச்சாளர் கப்டன் தசுன் விஜசிங்க தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை அறிவிப்பதற்கும் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் 117 எனும் துரித அழைப்பு இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துமாறு இடர்முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேநேரம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சார விநியோகம் இடைநிறுத்தப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி. சுலக்ஷன ஜயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

நிவாரண நடவடிக்கைகளின்போது ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைக்கும் வகையில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ☞ 8

## பெருந்தோட்டங்களைத் திரும்பப் பெற்று தொழிலாளருக்கு பிரித்துக்கொடுப்போம்

### ஆட்சிக்கு வந்ததும் இது நடக்கும் என்கிறார் திகாம்பரம்

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும் பெருந்தோட்டங்களை நிறுவனங்களிடமிருந்து மீளப்பெற்று அவற்றை தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுப்போம். இதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்துவோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மானெமுவ பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் ☞ 2

## வளிமண்டலவியல் திணைக்களம் ஒரு கிணற்றுத் தவளை: வசதியும் குறைவு

### சாடுகிறார் இராஜாங்க அமைச்சர்

வளிமண்டலவியல் திணைக்களம் மிகவும் பின்தங்கிய தொழில்நுட்ப வசதிகளுடனேயே உள்ளது என்றும் கிணற்றுத் தவளைகளாக ஒரு இடத்தில் முடங்கிக்கிடக்காமல் திணைக்களத்தினர் வெளியே வரவேண்டும் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வெள்ள இடர்களை கட்டுப்படுத்தும் நோக்கில் டொப்லர் ராடர் கருவியைப் பொருத்தும் செயற்பாடுகள் தாமதமாகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜப்பானின் ஜெய்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் குறித்த கருவியைப் ☞ 8

## வடக்கு, கிழக்கு தமிழர்களின் பேராதரவு பெறவல்லவர் யார்?

### அடையாளம் காணப்படவில்லை என்கிறார் சார்ள்ஸ் எம்.பி.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களில் 60 சதவீமான வாக்குகளைப் பெறவல்ல ஒருநபர் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி விசுவமடுவில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்துப் பேசப்படுகின்றது. இலங்கையின் வரலாற்றை எடுத்துப் பார்க்கின்றபோது இனவிகிதாசார அடிப்படையில் ☞ 8

## தமிழ் பொது வேட்பாளருக்கு ரெலோ ஆதரவு என முடிவு

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரைக் களமிறக்கும் யோசனைக்கு முழுமையான ஆதரவினை அளிப்பதற்குத் தீர்மானித்துள்ள ரெலோ இதற்கு அனைத்துத் தரப்புக்களினதும் ஆதரவு அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ரெலோவின் தலைமைக்குழுக் கூட்டம் நேற்றையதினம் மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது, ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இந்தக் கலந்துரையாட ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ், முஸ்லிம் வாக்குகள் ரணிலுக்கு மட்டுமே கிட்டும்

## ஐ.தே.க. உப தலைவர் நம்பிக்கை

தமிழ், முஸ்லிம் மக்களின் பெரும்பான்மையான வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் சிறிகோத்தா கட்சித் தலைமையகத்தில்இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்தநாட்டின்சிறுபான்மையினரானதமிழ்முஸ்லிம் மக்களில் வாக்காளர்களாக உள்ளவர்களின் சதவீதம் 32ஆகும். அந்த தொகையில் பெரும்பான்மையினர் ரணில்விக்கிமசிங்கவுக்கேவாக்களிப்பதற்குதீர்மானித்து விட்டனர்.

அதனடிப்படையில் பார்க்கின்றபோது, பொதுஜனபெரமுனவுக்கு 69இலட்சம் வாக்குகளே கிடைத்தன. அந்த தொகையில் ஒருவாக்கேனும் அதிகமாக ரணில் விக்கிரமசிங்க இந்தத் தடவை பெற்றுக்கொள்வார்.

ஆகவே அவர் மீண்டும் ஜனாதிபதியாகுவது உறுதியாகிவிட்டது. அவரால் மட்டுமே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்றார்.

# கட்டுமானங்கள் தொடர்பான தேசியக் கொள்கை அவசியம்

## அனுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

கொள்கையற்ற கட்டுமானங்களாலேயே இயற்றை இடர்களின் போது உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன என்று தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க, கட்டுமானங்கள் தொடர்பாகத் தேசியக் கொள்கை ஒன்று உருவாக்கப்படுவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் கடுமையான மழையுடனான காலநிலை காணப்படுகின்றது. அது இயற்கையின் சுபாபம் என்று நாம் கொள்ள முடியும். ஆனால் அந்தக் காலநிலைகாரணமாக உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. அந்த உயிரிழப்புகளுக்குக் காலநிலை காரணமல்ல.

இதுவரைகாலமும் தவறான கொள்கையுடன் முன்னெடுக்கப்பட்ட கட்டுமானங்களே அதற்கு அடிப்படைக் காரணங்களாகவுள்ளன. ஆகவே நாட்டில் கட்டடங்களை அமைப்பது தொடர்பான முகாமைக்குக் கொள்ளையொன்று வகுக்கப்பட வேண்டும்

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சிக் காலத்தில் மழைவீழ்ச்சி அதிகமாக பெறும் பகுதிகளை அடையாளம்காண முடியும். இடர்கள் இடம்பெறுவதற்கு முன்னதாகவே பாதுகாப்பை ஏற்படுத்த முடியும். ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் வானத்தைப் பார்த்து மழை வருமென்றும் மழை பெய்ததன் பின்னர் அதிகமாக மழை பெய்துவிட்டது என்றும் கூறும் நிலைமையே இருக்கின்றது.

இந்த நிலைமைகள் எல்லாம் நாட்டில் மாற்றம் அவசியம் என்ற செய்தியையே எமக்கு தருகின்றன. அதற்கான தீர்மானத்தினை மக்கள் எடுக்கவேண்டும். அவர்களின் தீர்மானத்தினை வழிநடத்துபவர்களாக நாம் இருப்போம். அனர்த்தங்களில் உயிரிழந்த அனைவருக்கும் எமது அஞ்சலிகள் என்றார்.

### இனி இது .....

இந்த நிலையில், கூட்டிணைவினர் நேற்று விடுத்த அறிக்கையொன்றில்சுமந்திரனுடனான விவாதம் தேவையற்றது என்று மறைமுகமாகத்தெரிவித்துள்ளனர்.

"பொது வேட்பாளர் தேவையா என்பதுதொடர்பாகப்பொதுவெளியில் உரையாடல்களை நடத்துவது நல்லது என்று எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியிருந்தார். எனினும் பொது வேட்பாளர் தொடர்பாக வவுனியாவில் 2024 ஏப்பிரல் 30ஆம் திகதி நடைபெற்ற பொது மக்கள் அமைப்புகளின் கூட்டிணைவும், அதன் முன்னரும் பின்னரும் எம்மால் பல்வேறு மக்கள் அமைப்புகளுடன் நடத்தப்படும்கலந்துரையாடல்களும் பொது வெளியில் நடத்தப்படும் உரையாடல்கள்தான்.

அவ்வாறான உரையாடல்களே வவுனியாவில் பொதுமக்கள் அமைப்புகளின்கூட்டிணைவுக்கும், பொது வேட்பாளர் தொடர்பான கொள்கை அடிப்படைகளுக்கும், வவுனியாப் பிரகடனத்திற்கும் வழிவகுத்திருந்தன, இன்று வலுச்சேர்க்கின்றன. இன்றுள்ள நிலையில் பொது வேட்பாளர் தேவையாஎன்றஉரையாடலுக்குப் பதிலாகப் பொதுவேட்பாளர் பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கை நிலைப்பாடுகளுக்கு ஆதரவைத் திரட்டும்உரையாடல்கள்நிகழ்வதே பொருத்தமானது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது'' என்று அந்த அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டுள்ளதன்படி பொது வேட்பாளரை ஆதரித்து சுமந்திரன் பேசப்போவதில்லை, அது தேவையற்றது என்றுதான் அவர் பேசப் போகிறார் அல்லது அதனால் ஏற்படும் பாதங்களைத்தான் அவர் முதன்மைப்படுத்துவார். அப்படிப்பட்ட நிலையில் இந்தப் பொது விவாதம் நடப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதைத்தான் அறிக்கை குறிப்பிடுகின்றது. சிதறிக் கிடக்கும் தமிழ் மக்களின் ஒற்றுமைக்காகத்தான் தமிழ்பொது வேட்பாளர் என்று கூட்டிணைவு சொல்லிக்கொண்டாலும் அது தான் எடுத்துக்கொண்ட கருத்தியலுக்கு ஆதரவானதமிழர்களைமட்டும்தான் ஒருங்கிணைக்கப் பார்க்கிறது அல்லது தன் பின்னால் வரச் சொல்கின்றது என்பது இப்போது தெளிவாகின்றது. எனவே அதனிடமிருந்து நேர்மையான வெளிப்படையான பொது உரையாடல்களை எதிர்பார்க்க முடியும் என்று தோன்றவில்லை.

..............................

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தனது பரப்புரைகளில் தாக்கத் தொடங்கியுள்ளார். பொதுவாகவே சஜித் ஒரு குழந்தைப் பிள்ளை, அவருக்கு ஒன்றும் தெரியாது என்று எள்ளி நகையாடுவது அவரது வழமை. இப்போது கட்சியின் இலச்சினையாகவுள்ள தொலைபேசியை நகைச்சுவைப் பொருளாகப் பயன்படுத்தியுள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சியின்பிரதேச அமைப்பாளர்களுக்கானநியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் சிறிகொத்தவில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியவர், "தற்போது காலம் மாறிவிட்டது. சமகாலத்தில்ஒவ்வொருஇலக்கமாக சுழற்றும்பழையதொலைபேசியை யாரும் பயன்படுத்துவதில்லை. தற்போது தொடுதிரை அல்லது அழுத்தும் தொலைபேசியையே பயன்படுத்துகின்றார்கள். ஆகவே பயன்பாடுத்தாதவொரு பொருள் பற்றி நாம் அதிகமாக கவலைப்பட வேண்டியதில்லை" என்றார்.

ஐக்கியமக்கள்சக்தியின்தேர்தல் இலச்சினையாக இலக்கம் சுழற்றும் பழைய காலத் தொலைபேசியின் படமே இருக்கின்றது. அதனைக் குறிப்பிட்டே ரணில் இவ்வாறு பேசியுள்ளார். ரணில் சொல்வதைப் போன்று சஜித் ஒரு குழந்தைப் பிள்ளை, ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பெடுக்கப் பயந்து ஓடியவர் என்றால்அவரையும்ஒருபொருட்டாக மதித்து ரணில் ஏன் ஒவ்வொரு கூட்டத்திலும்கருத்துத்தெரிவிக்கிறார் என்கிறார்கள் மற்றவர்கள்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

### கன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இரத்தினபுரி-எலபாத்த பகுதியில் வெள்ளநீரில்மூழ்கிபெண்ணொருவர் உயிரிழந்துள்ளதோடு இரத்தினபுரி அயகம பகுதியில் தும்பர பகுதியில் மண்மேடுசரிந்துவீழ்ந்ததில்ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி கிரியெல்ல பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர்உயிரிழந்துள்ளார்.

அதேபோன்று, அவிசாவளை - புவக்பிட்டிய எலிஸ்டன் தோட்டப்பகுதியில் வீடுவெள்ளத்தில் மூழ்கியதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

78 வயதான தந்தை, 36 வயதான மகள் மற்றும் 7 வயதான பேத்தி ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, அவிசாவளை ஹேவாயின்னபகுதியில்மண்மேடு சரிந்து விழ்ந்ததில் 11வயதான சிறுமியொருவர்உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மாத்தறை - தெய்யந்தர பல்லேவெல பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 20 மற்றும் 27 வயதுடைய இருவர் உயரிழந்துள்ளதோடு மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் காயமடைந்த மற்றுமொருவர்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம், கற்பிட்டி - நுரைச்சோலை, இலந்தையடி பகுதியில் இயந்திரப் படகு மூலம் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரின் இயந்திர படகு அலையில் சிக்கி விபத்துக்குள்ளானதில் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுரைச்சோலை - இளந்தையடி பகுதியைச் சேர்ந்த டபிள்யூ. ரணில் பெர்னாண்டோ (வயது 33) எனும் இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த மீனவர், மீன்பிடித் தொழிலுக்காக இயந்திர படகில் தனது நண்பர்களுடன் கடலுக்குச்சென்றபோது, இயந்திரப் படகு பெரும் அலையில் சிக்குண்ட நிலையில் நீரில் மூழ்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அவருடன் பயணித்த ஏனைய மீனவர்கள் நீரில்மூழ்கியமீனவரைஉடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

### பெருந்தோட்டங்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இன்னமும் மூன்று மாதங்களுக்குள் தேசிய தேர்தல் நடைபெறும்அதில்நாம்அமோகமான வெற்றியைப்பெறுவோம். அவ்வாறு வெற்றி பெற்றவுடன் குறிப்பிட்ட காலத்துக்குள் எமது மக்களின் பிரதான பிரச்சினையாகவுள்ள சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே நோக்கமாகும்.

தற்போதுசம்பளப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படவேண்டும்என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அதிகூடிய சம்பளத்தினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதிலும் அதற்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும்நாம்முழுமையாக தயாராகவே உள்ளோம்.

ஆனால் கம்பனிகள் நிச்சயமாக அந்தச் சம்பளங்களை வழங்கப்போவதில்லை. ஆகவே சம்பளப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு எமது மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கிவிடுவதுதான். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தோட்டங்களைகம்பனிகளிடமிருந்து மீளப்பெற்று எமது மக்களிடத்தில் அவற்றை வழங்குவோம். சிறுதோட்ட உரிமையாளர்களாக அவர்களைமாற்றுவோம். அவ்வாறு மாற்றுகின்றபோது அவர்கள்தான் தொழிலாளர்கள். அவர்கள்தான் முதலாளிகள், கங்காணிகள். அதன் பின்னர் எவரும் தலையீடுகளைச் செய்ய முடியாது. அதனை நான் நிச்சயமாக செய்தே தீருவேன் என்றார்.

### 150 மி.மீ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனை வழங்கியுள்ளது.

இதேநேரம், மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும். அதேநேரம் மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகளவான கனமழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் பரவலாக மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறுபொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் மழையுடனான வானிலை நீடிப்பதால், கடந்த 24 மணித்தியாலத்தில் எகலியகொடையில் 427 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அத்துடன் இங்கிரியவில் 348 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் அக்குரஸ்ஸவில் 283 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் சாலாவயில் 280 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பாலிந்துநுவரவில் 276 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் தெரனகலவில் 267 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

### தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லின் இறுதியில் ரெலோவின் ஊடகப்பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்ததாவது; தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைமைக்குழுகூட்டத்தில்ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவது குறித்த விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது. கடந்தகால எமது அனுபவங்களின் அடிப்படையிலும், தமிழ் மக்கள் மத்தியில் பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாடு எழுந்துள்ள சூழ்நிலையிலும் காலத்தின் தேவை மற்றும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டும்பொதுவேட்பாளர் என்ற கோரிக்கைக்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டை எமது கட்சியின் தலைமைக்குழு எடுத்துள்ளது. இந்தக் கோரிக்கையானது வெற்றியளிப்பதற்குத் தமிழ்த் தேசியத் தரப்பில் இருக்கும் அனைவரும் ஒன்றிணைந்து பொதுவேட்பாளர்என்றவிடயத்தினை முன்னிறுத்துவதற்கான அவசியத்தையும்நாம்வலியுறுத்துகின்றோம். அனைத்துக் கட்சிகளையும், ஏனைய தரப்பினரையும் ஒன்றிணைக்கும் முயற்சிக்கு எமதுபூரணமான ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் வழங்குவதெனவும் தீர்மானித்துள்ளோம் என்றார்.

### 10 மாவட்டங்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு மண்சரிவுஅபாயசிவப்புஎச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தின் மத்துகமை, புளத்சிங்கள, பாலிந்தநுவர மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேச செயலாளர்பிரிவுகளிற்கும், கொழும்பு மாவட்டத்தின் பாதுக்கை பிரதேச செயலாளர் பிரிவிற்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்று அதிகாலை 04 மணி முதல் நாளை அதிகாலை 04 மணி வரை இந்த மண்சரிவு எச்சரிக்கை அமுலில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தின் பாதுக்கை பிரதேச செயலக பிரிவுக்கும், களுத்துறை மாவட்டம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் 12 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் சிவப்பு மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, கேகாலை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் உள்ள 41 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலையையடுத்துபலபகுதிகளில்மண்சரிவு அபாயம்ஏற்படும்எனவும் இதனால் பாதுகாப்பற்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும், அறிவுறுத்தல்களுக்கு அமைய தேவையேற்படின் இடம்பெயரத்தயாராகஇருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் பொது வேட்பாளர்; இதுவரை நடந்தது என்ன?

## கூட்டிணைவு அறிக்கை

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் பலவற்றுடனும் ஒரு சுற்றுப் பேச்சு நடத்தப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு மீண்டும் ஒன்றுகூடி அடுத்த கட்ட நகர்வு தொடர்பில் ஆராய இருப்பதாக நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

2024 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வவுனியாவில் கூடிய தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக்கொண்டமக்கள்அமைப்புகள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றின. அந்தத் தீர்மானம் பின்வரும் விடயங்களைக் கொண்டிருந்தது.

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் பிரயோகிப் பதற்கானஒருகளமாகஜனாதிபதித்தேர்தலைக் கையாள்வது.

2. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக்கான பொது வாக்கெடுப்பாகக் கையாள்வது.

3. அதற்கமைய ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது.

4. அதற்காகச் சிவில் சமூகமும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது.

5. தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்காலக் கட்டமைப்புக்களை நோக்காகக் கொண்டு செயற்படுவது.

மக்கள் அமைப்புக்களும் அரசியற் கட்சிகளும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்பக் கலந்துரையாடல்களைக் கட்சிகளுடன் மேற்கொள்வதற்காக தற்காலிகமான ஒரு குழு உருவாக்கப்பட்டது. அக்குழு தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் பெரும்பாலானவற்றைச் சந்தித்தது. அச்சந் திப்புகளின் விவரங்களையும் , விளைவுகளையும் இந்த ஆவணம் விவரிக்கிறது.

தமிழ் அரசு கட்சியின் நடப்புத் தலைவர் மாவைசேனாதிராசாகட்சியின்நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்குக் கடந்த மே 19ஆம் திகதி வரையிலும் அவகாசம் கேட்டிருந்தார். மே 19ஆம் திகதி நடந்த மத்திய குழுக்கூட்டத்தின் அடிப்படையில்அக்கட்சியானதுஅதுதொடர்பான முடிவை இப்போதைக்கு எடுப்பதில்லை என்று முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது. எனினும் கட்சிக்குள் ஒரு பகுதியினர் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கிறார்கள். அதற்கு ஆதரவாகப் பொதுவெளியில் பேசியும் வருகிறார்கள்.

செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவில் உறுதியாக உள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டது. பொதுவேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு ஆகிய இரண்டும் ஏறக்குறைய ஒரே அடிப்படையைக் கொண்டவை என்பதை அக்கட்சி ஏற்றுக் கொள்கின்றது.எனினும்இரண்டுதெரிவுகளிலும் பொதுவேட்பாளரில்தான்ஆபத்துஅதிகம்என்று அக்கட்சி நம்புகின்றது. அந்த அடிப்படையில் அவர்கள் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவைத் தெரிவித்தார்கள்.

க.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியானதுதொடக்கத்திலிருந்தே பொது வேட்பாளரை ஆதரித்து வருகிறது. இந்த விடயத்தில் பொது மக்கள் அமைப்புகளின் முன்னெடுப்புக்கு அக்கட்சி தனது பூரண ஆதரவைத் தெரிவித்தது.

ஜனநாயகதமிழ்த்தேசியக்கூட்டணியினர் கூட்டாக முடிவெடுத்து அறிவிப்பதற்குக் கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள்.

எனினும்கூட்டுக்குள்காணப்படும்ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியானது தொடக்கத்திலிருந்தே பொது வேட்பாளர் என்ற கோரிக்கையை முன்வைத்து வந்தது. அதற்கு ஆதரவாகப் பொது வெளியில் பேசியும் வருகின்றது. எம்முடனான சந்திப்பிலும் அக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியசுரேஷ்பிரேமச்சந்திரன் அவர்கள் அதே நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தார்.

சந்திப்பில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலை இயக்கம் அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பொது வேட்பாளர் என்ற விடயத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டார். எனினும் அது ஒரு சாதாரண விடயம் அல்ல என்பதனை வலியுறுத்தினார். தமிழ் பொது வேட்பாளர் தோற்கக்கூடாது. அதற்காக கடுமையாக உழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கட்சிகளும் பொதுமக்கள் அமைப்புகளும் இணைந்த ஒரு கட்டமைப்பு அவசியம் என்றும் அதற்குத் தாங்கள் தயார் என்றும் கூறினார்.

ந.ஸ்ரீகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சியானது பொது வேட்பாளரை முழுமனதோடு ஏற்றுக்கொள்கிறது. அதில் உள்ள சாதக பாதகங்களை அக்கட்சி சுட்டிக் காட்டியது.

ஜனநாயகப் போராளிகள் கட்சி, பொது வேட்பாளரை ஏற்றுக்கொள்கிறது. அதற்காகப் பொது மக்கள் அமைப்புகளோடு இணைந்து செயற்படத் தாம்தயார் என அதன் தலைவர் சி. வேந்தன் உள்ளிட்ட பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி அமைப்பு தமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்காகத் தர்மலிங்கம் சித்தார்த்தன் கால அவகாசம் கேட்டார். ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற விடயத்தை அக்கட்சி கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும், அதில் இருக்கக்கூடிய இடர்களைக் குறித்து அக்கட்சி ஆழமாக யோசிக்கின்றது. எனவே தமது முடிவை அறிவிப்பதற்குக் கால அவகாசம் கேட்டது.

அங்கத்துவக் கட்சிகளில் அநேகமானவை தமது ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்திய போதும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி எனும் அடிப்படையில் ஒன்று கூடி பொது வேட்பாளர் தொடர்பான தம்முடைய உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவிக்கக் கால அவகாசம் கோரியிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொது வேட்பாளர் என்ற தெரிவைத் தொடக்கத்தில் இருந்தே ஆதரித்து வருகிறது. அதன் மேடைகளில் ஏற்கனவே அது தொடர்பாகப் பேசத் தொடங்கிவிட்டது. எம்முடனான சந்திப்பிலும் பொ. ஐங்கரநேசன் அதே நிலைப்பாட்டைத் தெரிவித்தார்.

அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் பொது வேட்பாளரைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்கிறது.அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றது.

கட்சிகளுடனான சந்திப்புகளின் பின்னர் கட்சித் தலைவர்களைத் தவிர கட்சிகளுக்குள் ஜனாதிபதித் தேர்தலைக் குறித்துத் துலக்கமான, வெளிப்படையான நிலைப்பாடுகளை கொண்டிருக்கும் அரசியல்வாதிகளையும், கட்சிகளைச் சாராத அரசியல்வாதிகளையும் எமது குழு சந்தித்தது.

அதன்படி க.அருந்தவபாலன் அவர்கள் பொதுவேட்பாளர்என்றதெரிவைமுழுமையாக ஏற்றுக்கொள்கிறார். அதற்காக உழைக்கவும் தயாராகக் காணப்படுகின்றார்.

எமதுகுழுதமிழரசுக்கட்சியின்தலைவரை உத்தியோகபூர்வமாக சந்தித்தது. எனினும் எதிர்காலத்தில் கட்சித் தலைமைக்காகப் போட்டியிடக்கூடிய இருவரையும் சந்திப்பது பொருத்தமானதாக இருக்குமென விதந்துரைக்கப்பட்டதால் சிவஞானம் சிறிதரனையும் எம்.ஏ.சுமந்திரனையும் சந்திப்பது என்று குழு முடிவெடுத்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்.சிவஞானம் சிறீதரன் தமிழ் அரசுக் கட்சிக்குள் பொது வேட்பாளர் என்ற தெரிவைத் தொடர்ச்சியாக ஆதரித்து வருகிறார். அதற்கு ஆதரவாகப் பொது வெளியில் பேசியும் வருகிறார். எமது சந்திப்பிலும் தமது தனிப்பட்ட ஆதரவு நிலைப்பாட்டை அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர், எம்.ஏ.சுமந்திரன் பொதுவேட்பாளர் தொடர்பில் உள்ள ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டிக் கருத்துத் தெரிவித்தார். எனினும் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்கு இது ஒரு சரியான தருணம் என்றும், இத்தேர்தலில் தமிழ் மக்களை ஒன்று திரட்டத் தவறினால் அடுத்த ஆண்டு நடக்கக்கூடிய எல்லாத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் சிதறி வாக்களிப்பார்கள் என்பதையும் சுட்டிக்காட்டிய பொழுது, அந்தத் தர்க்கத்தை அவர் ஏற்றுக்கொண்டார்.

தமிழ் மக்களை ஒரு மையத்தில் ஒன்றிணைப்பது என்ற விடயத்தில் அவருக்கும் எமக்குமிடையே வேறுபாடுகள் இருக்கவில்லை. எம்மைச் சந்திக்கும் பொழுது அவர் பொது வேட்பாளரை நிராகரிப்பதற்கு ஒரு காரணத்தை வைத்திருந்தார். ஆனால் சந்திப்பு முடிந்தபொழுது பொது வேட்பாளரை ஆதரிப்பதற்குமிகப்பலமானஒருநடைமுறைக் காரணத்தைஏற்றுக்கொண்டதைத்தெரிவித்துச் சென்றார்.

பொது வேட்பாளர் தேவையா என்பது தொடர்பாகப்பொதுவெளியில்உரையாடல்களை நடத்துவது நல்லது என்று எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியிருந்தார். எனினும் பொது வேட்பாளர் தொடர்பாக வவுனியாவில் 2024 ஏப்பிரல் 30ஆம் திகதி நடைபெற்ற பொது மக்கள் அமைப்புகளின் கூட்டிணைவும், அதன் முன்னரும் பின்னரும் எம்மால் பல்வேறு மக்கள் அமைப்புகளுடன் நடத்தப்படும் கலந்துரையாடல்களும் பொது வெளியில் நடத்தப்படும் உரையாடல்கள்தான்.

அவ்வாறான உரையாடல்களே வவுனியாவில் பொதுமக்கள் அமைப்புகளின் கூட்டிணைவுக்கும், பொது வேட்பாளர் தொடர்பான கொள்கை அடிப்படைகளுக்கும், வவுனியாப் பிரகடனத்திற்கும் வழிவகுத்திருந்தன, இன்று வலுச்சேர்க்கின்றன. இன்றுள்ள நிலையில் பொது வேட்பாளர் தேவையா என்ற உரையாடலுக்குப் பதிலாகப் பொதுவேட்பாளர் பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கை நிலைப்பாடுகளுக்கு ஆதரவைத் திரட்டும் உரையாடல்கள் நிகழ்வதே பொருத்தமானது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்புக்கள் பெருமளவுக்கு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தவை. ஏனைய மாவட்டங்களில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளோடும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தற்போதைய உறுப்பினர்கள், ஏனைய அரசியற் பிரமுகர்கள் என்பவர்களுடனும் எதிர்காலத்தில் சந்திப்புகள் இடம்பெறும். அந்தச் சந்திப்புக்களின் விவரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

மேற்கண்ட சந்திப்புகளின் பின் பொது மக்கள் அமைப்புகள் மீண்டும் விரைவில் நேரடியாகச் சந்திப்பது என்று முடிவெடுக்கப் பட்டுள்ளது. அச்சந்திப்பில் கட்சிகளின் நிலைப்பாடுகள் ஆராயப்படுவதுடன் பொது மக்கள் அமைப்புகளின் கூட்டிணைவின் அடுத்த கட்ட வேலைத் திட்டங்கள், நடவடிக்கைகள் குறித்த முடிவுகளும் மேற்கொள்ளப்படும்.

# தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கியே தீருவோம்: கிழக்கிலிருந்து தெரிவுசெய்வதெனவும் தீர்மானமாம்

## சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவதில் உறுதியாக உள்ளோம் என்று வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் குழுவின் அங்கத்தவர்கள் தெரிவித்ததோடு களமிறக்கப்படும் வேட்பாளர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பதில் கரிசனை கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

அரசியல் கட்சிகள் கால அவகாசத்தைக் கோரியுள்ள நிலையில் அத்தரப்புக்களுடன் இரண்டாம் கட்டமாகவும் பேசுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அப்பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்துடன், அரசியல் கட்சிகளின் முடிவுகள் கிடைக்கும் வரையில் காத்திருக்காமல், வணிகர் கழகம் கடற்றொழிலாளர் சங்கங்கள், கூட்டுறவு ஒன்றிணைந்த சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்துக்கு ஆதரவு திரட்டும் முகமாக கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் தீவிரப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அப்பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

முன்னதாக, ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பில் நான்கு முனைகளில் நகர்வுகள் செய்யப்பட்டு ஈற்றில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை மையப்படுத்தி பத்துப்பேர்கொண்ட குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த குழுவானது பொதுவேட்பாளர் தொடர்பான பொதுக்கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்காக பணியாற்றும் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த குழு அரசியல் கட்சிகளுடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தது.

அந்தச் சந்திப்புக்களின் அடிப்படையில் அரசியல்கட்சிகள் தமது தீர்க்கமான முடிவை அறிவிப்பதற்கு காலஅவகாசத்தைக் கோரியுள்ள நிலையில் தற்போது சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் குழு தமது கட்டமைப்பை வலுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதேநேரம், யாழ்.வணிகர் கழகம், பார ஊர்தியாளர்கள் சங்கம், கடற்றொழிலாளர் சங்கங்கள், ஒன்றிணைந்த கூட்டுறவாளர் சங்கம் உள்ளிட்ட பலதரப்பட்ட கட்டமைப்புக்களையும் சந்தித்து அவற்றின் ஆதரவுகளை திரட்டும் பணிகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேவை உருப்படியான நடவடிக்கையே

தெற்கில் கடும் மழை பெய்கிறது. காலநிலை மாற்றம் காரணமாக தென்மேல் பருவக் காற்றில் கிடைக்கும் மழை இம்முறைஅதிகளவில்கொட்டுகின்றது. எல்நினோலாநினோ காலநிலைகளினால் இலங்கை இனிவரும் காலங்களில் கடும்வெப்பம் மற்றும் அதிகளவு மழைப்பொழிவு என்பவற்றை மாறி மாறி எதிர்கொள்ள நேரிடும் என்று ஏற்கனவே சுற்றுச்சூழலியலாளர்கள் எச்சரித்திருந்தார்கள். கோடை காலங்கள் வறட்சி மிக்கதாகவும் மழை காலங்கள் வெள்ளப் பெருக்கோடும் இருக்கும் என்று எதிர்வுகூறப்பட்டபோதும் அதனை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் நாடு இல்லை என்பதையே இப்போது வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று நள்ளிரவு வரையான 24 மணி நேரத்தில் மட்டும் மழையினால் ஏற்பட்ட இயற்கை இடர்கள் காரணமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல இடங்கள் பெரு வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளம் மற்றும் கடும் மழையின் அச்சம் காரணமாக இன்று நாடு முழுவதும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இயற்கைப் பேரிடரைச் சமாளிப்பதற்கும் எதிர்கொள்வதற்கும் நாடு தயாராக இருக்கவில்லை என்பதை இராஜாங்க அமைச்சரே ஒத்துக்கொள்கிறார். ஆனால் அதற்கான பழியை அவர் வானியல் திணைக்களத்தின் மீது போட்டுத் தப்பிக்கப் பார்க்கின்றார். அந்தத் திணைக்களம் ஒரு கிணற்றுத் தவளை என்றும் சீறியிருக்கிறார்.

கடும் மழை பெய்யும்போது வெள்ளம் ஏற்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிந்து முன்கூட்டியே எச்சரித்து நடவடிக்கை எடுப்பதற்கான டொப்லர் ராடர் கருவியைப் பொருத்தும் செயற்பாடுகள் தாமதமாகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

”அதேநேரம் எமது வளிமண்டலத்திணைக்களத்தின் தொழில்நுட்பப் பிரிவினை எடுத்துக்கொண்டால் அதுமிகவும் பின்னடைந்த நிலையிலேயே உள்ளது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு வளிமண்டலவியல் திணைக்களம் எமக்கு ஆதரவு வழங்கவேண்டும். அவர்கள் ஒரே இடத்தில் முடங்கியுள்ளனர். கிணற்றுத் தவளைகள் போன்று ஒரு இடத்தில் முடங்கியிருந்து இத்தகையை பணிகளை முன்னெடுக்க முடியாது என்பதை அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

எமக்குபுதியதொழில்நுட்பத்தினைநாடவேண்டியஅவசியம் ஏற்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தினை அபிவிருத்தி செய்வதற்கு நாம் உலக வங்கியிடம் கடனைப் பெற்றுள்ளோம். அந்தச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன”– என்கிறார் அமைச்சர்.

அவர் சொல்வதைப் போன்று வளிமண்டவியல் திணைக்களத்திற்குப் போதிய வசதிகள் இல்லை என்பது உண்மைதான். மழைப் பொழிவைக் கணிப்பதற்கும் எதிர்வுகூறுவதற்கும், வேறு இயற்கைப் பேரிடர்களைக் கணிப்பதற்குமான நவீன தொழில்நுட்ப வசதிகள், நிதி ஒதுக்கீடுகள் அந்தத் திணைக்களத்திடம் இல்லை. அதனால் வானியல் முன்னறிவுப்புகளை மிகத் துல்லியமாக வெளியிட அதனால் முடியவில்லை என்பதும் உண்மை. ஆனால் அதற்கான பழியை அந்தத் திணைக்களத்தினர் மீது மட்டும் போட்டுவிட முடியாது. அந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய ஆளும் தரப்பினரின் கடமைதான்.

இவ்வளவு காலமும் அது பற்றி அக்கறை செலுத்தாமல் இருந்துவிட்–டு வெள்ளம் ஏற்பட்டு, மக்கள் ஆளும் தரப்பைத் திட்டத் தொடங்கியதும் பழியை திணைக்களம் மீது போடுவது நியாயம் இல்லை. இப்போது பழி ஒரிடம் பாவம் ஒரிடம் என்றவாறு செயற்படாமல், விரைந்து நடவடிக்கை எடுத்து இனிவரும் காலங்களிலாவது இயற்கை இடர்களை எதிர்கொள்வதற்கான தயார் நிலைக்கு நாட்டைக் கொண்டு வர ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# கல்லறைகளாக மாறிய காசாவில் போர் முடிவுறுமா ?

## ர.ஃ.பா மீதான இஸ்ரேலின் இறுதி தாக்குதல் !




- ஐங்கரன் விக்கினேஸ்வரா-

ஹமாஷ் உடனான போரின் பின்னர், இஸ்ரேலை பாதுகாக்க அமெரிக்கா இரும்புக் கவச உறுதிப்பாட்டை எடுத்துள்ளதாக ஜோ பைடன் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது காசா மீதான போரை இஸ்ரேல் பிரதமர் கையாளும் விதம் தவறானது என அதிபர் ஜோ பைடன் கண்டனத்துடன் விமர்சனம் செய்துள்ளார்.

### ரஃபா மீது இஸ்ரேல் படையெடுப்பு:

ரஃபா மீது இஸ்ரேல் படையெடுப்பது குறித்து அமெரிக்கா தனது தெளிவான நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்திய பின்னரும், இஸ்ரேல் மீண்டும் தனது படை வலிமையை காட்டியுள்ளது,

வெள்ளை மாளிகையால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பொருத்தமான மற்றும் நம்பகமான மனிதாபிமான திட்டம் இல்லாமல் ரஃபா நடவடிக்கையை ஆதரிக்க முடியாது என்று ஜோ பைடன் கூறியுள்ளார்.

ஆயினும் இதனை எல்லாம் மீறி இஸ்ரேல் எகிப்து - ரஃபா எல்லைகளை கைப்பற்றி உள்ளது. இஸ்ரேல் படையெடுப்பு நடத்துவதற்கு முன்பு அமெரிக்காவின் எண்ணங்களை கேட்க இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.

பணயக்கைதிகள் விடுவிக்கும் ஒப்பந்தம் குறித்து ஜோ பைடன்-நெதன்யாகு விவாதித்தனர். அதேவேளை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் மனிதாபிமானஉதவிகள்குறித்துவிவாதிக்கப்பட்டது.

இதற்கு முன்னதாக, இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியபின்னர் இஸ்ரேலைபாதுகாக்கஅமெரிக்கா முழுமையான உறுதிப்பாட்டை எடுத்துள்ளதாக ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

ஹமாஸ்அமைப்பின்அக்டோபர்7தாக்குதலுக்குப் பின்னர் காசாவில் உடனடி போர்நிறுத்தத்துடன் சில பணயக்கைதிகளை விடுவிக்க வடிவமைக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் இரு தடவைகள் நிகழ்ந்தன.

### அமெரிக்கா இஸ்ரேல் மீது அதிருப்தி:

ரஃபா மீதான போரை இஸ்ரேல் தற்காலிகமாக நிறுத்தவேண்டும்எனதாம்அழைப்புவிடுப்பதாகவும் இஸ்ரேல் அரசுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிவாரண பொருட்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் கூறிய அதிபர் ஜோ பைடன், நிவாரண பொருட்கள் விநியோகத்தை இஸ்ரேல் ராணுவம் தடுக்கிறது என்றும் விமர்சித்துள்ளார்.

போர் நிறுத்தம் ஏற்பட்டால், காசாவிற்குள் புதிய குறுக்கு வழிகளைத் திறப்பதற்கான தயாரிப்புகள் உட்பட, மனிதாபிமான உதவி விநியோகங்களின் அதிகரித்த வேகம் குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

அதேவேளை காசா மீதான போரை இஸ்ரேல் பிரதமர் கையாளும் விதம் தவறானது என அதிபர் ஜோ பைடன் விமர்சனம் செய்ததை , இஸ்ரேலிய ஊடகங்கள் நையாண்டி செய்துள்ளன.

அத்துடன் தனியார் செய்தி நிறுவனத்திற்கு அமெரிக்க அதிபர் ஜோ அளித்த பேட்டியில், காசாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் அமைப்பின் வாகனம் மீது டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது மூர்க்கத்தனமானது



என கண்டித்துள்ளார்.

### அமெரிக்காவின் ஹமாஸ் மீதான அழுத்தம்:

ரஃபாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வது தொடர்பாக ஹமாஸிடம் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இஸ்ரேல் முன்வைத்துள்ள போர் நிறுத்த செயற்திட்டத்துக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும்என ஹமாஸ்அமைப்பினரிடம் அமெரிக்கவெளியுறவுத்துறைஅமைச்சர்ஆன்டனி பிளிங்கன் (Antony Blinken) கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தச் சூழலில், போர் நிறுத்தத்துக்கும் காசா மக்களுக்கும் இடையே மறித்து நிற்பது ஹமாஸ் அமைப்பினர்தான். எனவே, இந்த விவகாரத்தில் ஹமாஸ் உடனடியாக முடிவெடுத்து இஸ்ரேலின் செயற்திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கவேண்டும்.

ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக் கொள்ளவும், பிணைக் கைதிகளை மீட்பதாகவும் சூளுரைத்த இஸ்ரேல், காசாவில் வான்வழியாகவும், தரைவழியாகவும் தீவிர




தாக்குதல் நடத்தி வருகிறது.

### போர் நிறுத்தமா போர் முடிவுறுமா ?

சர்வதேச முயற்சியின் பலனாக இஸ்ரேல்-ஹமாஸ் இடையே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்காக சர்வதேச நாடுகளின் முன்னிலையில் நடைபெற்ற பலகட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியிலேயே முடிந்தன.

ரஃபா மீது இஸ்ரேலின் இறுதிப் படையெடுப்பு நிகழ்கிறது. ஆயினும் கல்லறைகளாக மாறிய காசாவில் போர் முடிவுறுவதற்கான சாத்தியங்கள் அரிதாகவே தென்படுகிறது.

# மாணிக்கக் கற்களுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்கவில் கைது

80 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களைச் சட்டவிரோதமாக தாய்லாந்திற்குக் கொண்டு செல்ல முயன்ற வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய வர்த்தகரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வெள்ளிக்கிழமை இரவு 09.45 மணியளவில் விமானம் மூலம் தாய்லாந்தின் பேங்காக் நகரத்திற்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றுள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவரது பயணப் பொதியிருந்து 80 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து , சந்தேக நபர் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இவருக்கு 10 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

(05)

# இரண்டு துப்பாக்கிகளுடன் பெண் உட்பட இருவர் கைது

இரண்டுதுப்பாக்கிகளுடன் பெண் உட்பட இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேதாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக் கப்படும் இரண்டு ரி 56 ரக துப்பாக்கிகள், இரண்டு மகசின்கள், 26 தோட்டாக்கள் மற்றும் 100 கிராம் ஹெரோயின் என்பன வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளன என குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலைமற்றும்ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டுபாயில் உள்ள குற்றவாளியின் நெருங்கிய சகாக்கள்

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் டுபாயில் தலைமறைவாக உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான சேடவத்த கசுனின் நெருங்கிய சகாக்கள் எனத் தெரியவந்துள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.;

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (05)

# மட்டு. – கல்முனை பிரதான வீதியில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு மற்றொருவர் பகாயம்


மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில்



உள்ள குருக்கள் மடத்தில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலே ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்மற்றுமொருவர்படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் களுதாவளை பகுதியை சேர்ந்த 18 வயதுடையவர் ஆவார்.

காயமடைந்தவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரான்குளம் பகுதியிலிருந்து இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றில் களுதாவளை நோக்கிச் சென்றுள்ளனர். மிகவும் வேகமாகசென்றமோட்டார் சைக்கிள் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடம் வளைவுப்பகுதியில்இருந்த மின்கம்பத்தில் மோதியே இந்தவிபத்துஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பெரும் சேதமடைந்துள்ளதாகவும் களுவாஞ்சிக்குடிபொலிஸார் தெரிவித்தனர். (05)

# அவிசாவளையில் வெள்ளத்தில் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் சாவு

அவிசாவளை, புவக்பிட்டிய, எலிஸ்டன்வத்தை , கெகில்ல பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களுள் 36 வயதான தாய், 7 வயதான மகள் மற்றும் 78 வயதான பாட்டன் ஆகியோர் அடங்குவர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 2 மணிக்கும் 3 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் வீட்டின் அருகில் உள்ள ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இவர்கள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலுமு, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வீட்டின் மீது மண்மேடு சரிந்ததில் கம்பஹாவில் இருவர் உயிரிழப்பு

கம்பஹா, பல்லேவல, தெய்யந்தர பகுதியிலுள்ள வீடொன்றின் மீது சனிக்கிழமை மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் 20 மற்றும் 27 வயதான இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்எனப்பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மண்மேடு சரிந்ததில் மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தோரின் சடலங்கள் எல்லேவெல வைத்திய சாலையில்வைக்கப்பட்டுள்ளதுடன், தெய்யந்தர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# பணத்தை திருடி கிரிக்கெட் மட்டை, புறாக்கள் வாங்கிய இரு மாணவர் நுவரெலியவில் கைது

நுவரெலியா, வட்டவளை பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்து 2 லட்சம் ரூபா பணத்தை திருடியதாக கூறப்படும் பாடசாலை மாணவர்கள் இருவர் வட்டவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டவளை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

13 வயதுடைய இரண்டு மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த மே மாதம் 28 ஆம் திகதி அவர்களது வீட்டிற்கு அருகில் உள்ள மற்றுமொரு வீடொன்றின் கதவை திறந்து உள்ளே நுழைந்து 2 லட்சம் ரூபா பணத்தைத் திருடியுள்ளனர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பின்னர், இவர்கள் இருவரும், திருடிய பணத்தைப் பயன்படுத்தி கையடக்கத் தொலைபேசி , கிரிக்கெட் மட்டை , 8 புறாக்கள் மற்றும் 2 மீன் தொட்டிகள் உள்ளிட்ட பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர் என விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இவர்கள் இருவரிடம் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை 80 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் கடை உரிமையாளர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 12 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# கிரியெல்லவில் மரம் முறிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழப்பு

இரத்தினபுரி, கிரியெல்ல பகுதியில் மரம் முறிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மழையுடனான வானிலை காரணமாக பல பகுதிகளில் அனர்த் தங்கள் ஏற்படுவதால் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 24 மணித்தியாலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில் 5 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# சிகரெட்டுகள், கையடக்கத் தொலைபேசிகளுடன் வந்த இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் கட்டுநாயக்கவில் கைது

## டுபாயிலிருந்து வந்தவர்

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் கையடக்கத் தொலைப்பேசிகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாயிலிருந்துவிமானம்மூலம்சனிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த காலி பிரதேசத்தில் வசிக்கும் 6 வயது நபரும் 27 வயதான பெண்ணினதும் பயணப் பொதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 40 லட்சம் ரூபா பெறுமதியான 40 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபரொருவரும் 27 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர்களுக்கு 2 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட கையடக்கத் தொலைப்பேசிகளுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவர் கொண்டுவந்த பயணப் பொதிகளிலிருந்து 30 லட்சம் ரூபா பெறுமதியான 77 கையடக்கத் தொலைப்பேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# இரத்தினபுரி பகுதியில் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு பெண் சாவு

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் இரத்தினபுரி, எலபாத்த பகுதியில் வெள்ள நீரில் அடித்துச்செல்லப்பட்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நாட்டில் அதிக மழையுடனான வானிலை நிலவுவதனால் பாதுகாப்பற்ற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தலொன்றை விடுத்துள்ளது.

மழையுடனான வானிலையையடுத்து பல பகுதிகளில்மண்சரிவு அபாயம் ஏற்படும் எனவும் இதனால் பாதுகாப்பற்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தல்களுக்கு அமைய தேவையேற்படின் இடம்பெயரத் தயாராக இருக்குமாறும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (05)



## 4 கங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியம் காணப்படுகிறது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, ஹொரணை, தொடங்கொட மற்றும் மில்லனிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுகிறது.

நில்வலா கங்கையின் மேல் பகுதியில் நேற்று இரவு முதல் பெய்துவரும் பலத்த மழை காரணமாக பஸ்கொட, கொட்டபொல, பிட்டபெத்தர, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட, கம்புருபிட்டிய, திஹாகொட, மாத்தறை மற்றும் தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

கிங்கங்கையின் மேல் பகுதியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நெலுவ, தவலம, நாகொட, நியாகம, வெலிவிட்டிய திவித்துர, எல்பிட்டிய, அக்மீமன, பத்தேகம மற்றும் போபே, போத்தல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நிலப் பிரதேசங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் வெள்ளப்பெருக்கு நிலைமை ஏற்படலாம்.

அத்துடன், களனி கங்கையின் மேல் பகுதிகளில் நேற்று இரவு முதல் கணிசமான மழை பெய்து வருவதால், தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, சீதாவக்க, தொம்பே, ஹோமாகம, கடுவலை, பியகம, கொலன்னாவ, கொழும்பு மற்றும் வத்தளை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட தாழ்நிலப் பகுதிகளுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழக்கப்படுகிறது. எனவே, இந்த நாட்டிற்கு 3 பில்லியன் டொலர் கையிருப்பைப் பெறுவதே எங்களின் முதல் பணியாகும் என அன்று அறிவித்தோம். அப்போது யாரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களில் ஒரு குழு ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்குவதற்காக விலகிச் சென்றது.

ஜே.வி.பி நகைத்தது. மொட்டுக் கட்சி விமர்சித்தது. ஐக்கிய தேசியக் கட்சி தனிமைப்பட்டது. ஆனால் நாங்கள் அதைவிட்டு விலகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் உண்மையின் பக்கமே நின்றது. எவ்வளவு கசப்பாக இருந்தாலும் உண்மையைப் பேசியது.

அன்று நாம் அனைவரும் இணைந்து அந்தத் தொகையைத் தேடியிருந்தால் இன்று இப்படி கஷ்டப்பட்டிருக்க மாட்டோம். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்காது. கடைசியில் பிரச்சினையில் சிக்கி ஏனைய நாடுகளிடம் உதவி கேட்டபோது இந்தியா எமக்கு மூன்றரை பில்லியன் டொலர்களை வழங்கியது.

அந்த மூன்றரை பில்லியனைக் கொண்டு ஒன்றரை வருடங்கள் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தினோம். 2020 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்திருந்தால் இந்த நாட்டிற்கு இவ்வாறான கதி ஏற்பட்டிருக்காது.

உணவு இல்லை, உரம் இல்லை, எரிபொருள் இல்லை, தொழிற்சாலைகள் மூடப்பட்டன, வருமான வழிகள் இல்லை. அனைவரும் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையிலே போராட்டம் தொடங்கியது. மொட்டுக் கட்சி ஆட்சிக்கு எதிராக இந்தப் போராட்டம் இடம்பெற்றது. மே 9 அன்று காலி முகத்திடலுக்கு வந்த எதிர்கட்சித் தலைவரையும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திஸாநாயக்கவையும் துரத்தினர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகியதன் பின்னர் பிரதமர் பதவியை ஏற்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சம்பிரதாய முறைப்படி சஜித் பிரேமதாசவிடம் கோரினார். ஆனால் அதற்கு அவர் முன்வரவில்லை. பிரேமதாசவோ ஜே.ஆர். ஜயவர்தனவோ இருந்திருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டிருக்க மாட்டார்கள். அதுதான் உண்மையான ஐக்கிய தேசியக் கட்சியின் போக்காகும்.

ஜே.வி.பியும் தப்பிச் சென்றது. அவர்களில் யாரிடமும் தீர்வு இருக்கவில்லை. பழைமையான அரசியலை மேற்கொண்டு, பொய்யாக நடக்கும் இவர்களிடம் தீர்வு இருக்கவில்லை.

என்னிடம் தீர்வு இருந்ததால் பயமின்றி பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன். முன்னர் கூறியதுபோல் 3 பில்லியன் டொலர்கள் கிடைத்தால் இந்நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என அறிந்திருந்ததால் அதற்கேற்ப செயற்பட்டேன்.

பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற பாடுபட்டேன். இந்நாட்டு மக்கள் 2023 கிறிஸ்மஸ் பண்டிகையையும் கடந்த தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் வெசாக் பண்டிகைகளையும் எவ்வாறு கொண்டாடினார்கள் என்பதைப் பார்க்கும்போது வித்தியாசம் தெளிவாகிறது.

விவசாயிகளுக்கு இன்று நல்ல விளைச்சல் கிடைத்து வருகிறது. ஆனால் நாம் இன்னும் இந்த நெருக்கடியிலிருந்து மீளவில்லை. அன்றாட வாழ்க்கையைத்தான் வாழ்கிறோம். அஸ்வெசும திட்டத்தின் மூலம் மக்களுக்கு சமுர்த்தியைப் போன்று மூன்று மடங்கு நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி மானியம் வழங்கப்படுகிறது.

அத்துடன் உறுமய திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிரந்தரக் காணி உரிமைகள் வழங்கப்படுகின்றன. எதிர்வரும் மாதத்தில் கொழும்பு அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 50,000 பேருக்கு அந்த வீடுகளுக்கான உரிமை வழங்கப்படும்.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் 83 பில்லியன் டொலர்கள் கடனாக இருந்தது. இது நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட அதிகமாகும். உங்கள் மொத்த ஆண்டு வருமானத்தை விட அதிகமாக இருந்தால் எப்படி கடனில் இருந்து விடுபட முடியும்? அதற்கு புதிய வருமான வழிகளை உருவாக்கி முன்னேற வேண்டும்.

அடுத்த 5 வருடங்களில் இந்தப் பொருளாதார ஸ்திரத்தன்மையை எவ்வாறு அடைவது என்பது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளோம். அதை மீறினால் மீண்டும் அவர்களின் ஆதரவு கிடைக்காது.

எங்களின் வெளிநாட்டுக் கடனை அடைக்க 2027 முதல் 2042 வரை கால அவகாசம் வழங்குமாறு கோரியுள்ளோம். அதற்கேற்ப இந்தப் பொருளாதாரத்தை எப்படி முன்னோக்கிக் கொண்டு செல்வது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இந்தக் கடனை செலுத்துவது மட்டுமல்ல, இன்னும் இறக்குமதி சார்ந்த பொருளாதாரமாக இருப்பதால், ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டுக் கடன் வாங்க வேண்டியுள்ளது.

அந்த நிலையில் தற்போதைய 83 பில்லியன் டொலர் கடன் தொகை இன்னும் அதிகரிக்கும். அப்போது இன்னும் 5 வருடங்கள் கடந்து நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி உருவாகும். அப்படியானால், எப்படி முன்னேறுவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். அதுதான் இப்போது நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாகும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க புதிய சட்டங்களைக் கொண்டு வரஇருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பியோட எந்தக் கட்சிக்கும் இடமளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவகாரத்திலிருந்து எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் யாரும் ஒழிவிடுவது நல்லதல்ல. மேலும் இந்த பிரச்சினையில் இருந்து ஊடகங்கள் தப்பி ஓடுவது நல்லதல்ல. இந்த விடயத்தில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் ஏனைய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து இந்தப் பிரச்சினையிலிருந்து நாட்டைக் காப்பாற்றினோம். இப்போது நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். எந்தவொரு கட்சியும் இதுவரை தமது வேலைத்திட்டத்தை முன்வைக்கவில்லை.

அவர்களால் அதை முன்வைக்க முடியாது. ஆனால் அரசாங்கம் என்ற ரீதியில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நட்பு நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை சட்டப்பூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தை இறக்குமதி பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் வகையில் இந்த சட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. அந்த இலக்குகளின்படி செயல்பட்டால்தான் இந்த நாடு அபிவிருத்தி அடையும்.

மொத்த தேசிய உற்பத்தியில் 100 இற்கு மேல் இருக்கும் கடனை 2032 இற்குள் 95 சதவீதமாகக் குறைக்க வேண்டும். அதுதான் முதல் விடயம். அதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் சந்திக்க வேண்டிய அடுத்த பிரச்சினை இதுதான் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

2027 இற்குள் நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 5% ஆக அதிகரிக்க வேண்டும். நாம் வேகமாக வளர்ச்சியடைய வேண்டுமானால், மொத்த உள்நாட்டு உற்பத்தியானது குறைந்தது 10 ஆண்டுகளுக்கு 8% ஆக இருக்க வேண்டும். மேலும், 2025 இற்குள் வேலையின்மை 5% ஆக குறைக்கப்பட வேண்டும். ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற, 2025 ஆம் ஆண்டுக்குள் நமது ஏற்றுமதி வருமானம் மொத்த தேசிய உற்பத்தியில் 25 சதவீதமாக இருக்க வேண்டும்.

2030 இல் இது 40 சதவீதமாக வேண்டும். 2040 இற்குள் 60 சதவீதமாக இருக்க வேண்டும். இந்த இலக்கின்படி, 2040 இல் நமது நாடு ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற வேண்டும். அதை நிறைவேற்ற அந்நிய முதலீடுகள் அவசியம். 2030 இற்குள், வெளிநாட்டு முதலீடு குறைந்தது 5 சதவீதமாக இருக்க வேண்டும். அதேசமயம் நாம் பெறும் வெளிநாட்டு முதலீடுகள் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்த இலக்குகளுடன் நாம் தொடர்ந்து பயணித்தால், நாடென்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியும். இந்த இலக்குகளை ஏற்கிறீர்களா இல்லையா என்பதை நான் அனைவரையும் கேட்க விரும்புகிறேன். பொருளாதாரப் பரிமாற்றச் சட்டத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன், அல்லது வேறு ஏதேனும் திட்டம் இருந்தால் முன்வைக்குமாறு அனைவரையும் கோருகிறேன்.

சர்வதேச நாணய நிதியம் இன்றி பணம் பெற வேறு வழியில்லை. எதையாவது பேசலாம். ஆனால் தீர்வு இல்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக சிலர் கூறுகின்றனர். கடைக்குச் சென்று இன்னும் ஒரு மாதம் கடன் தருமாறு முதலாளியிடம் கேட்பதைப் போன்று இவற்றைச் செய்ய முடியாது. இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் இதைப் பற்றி பேசுகிறார்கள். இரண்டு வருடங்கள் இதைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது.

எனவே, தவறான கருத்துக்களை வெளியிடாமல், இது குறித்து முறையான வேலைத்திட்டம் இருந்தால், அதை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இல்லையேல் இந்தத் திட்டத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 2020 இல் இதைப் பற்றி நாம் சொன்னபோது அனைவரும் அதனை நிராகரித்துவிட்டனர். அதனால்தான் இந்த நிலைக்கு வந்தோம். எனவே, சர்வதேச நாணய நிதியத்துடனான இந்த திட்டத்தை நாம் நிராகரித்தால், நாம் மேலும் படுகுழியில் விழ நேரிடும்.

எனவே பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான திட்டமொன்று இருக்க வேண்டும். அத்தகைய திட்டம் யாரிடமும் இல்லை என்பதால், அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டின் பொருளாதாரப் பரிமாற்றச் சட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். விமர்சனம் செய்வது எளிது. ஆனால் தீர்வு வழங்குவது கடினமானது. எனவே குறைகூறாமல் தீர்வை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து ஜனாதிபதி ஒருவரை தீர்மானிக்க முடியும். இல்லையேல் தென்னிலங்கை மக்களால் ஜனாதிபதி ஒருவரை தீர்மானிக்க முடியும். அதுவே யதார்த்தமாக உள்ளது.

அப்படியிருக்கையில் தற்போது வடக்கு, கிழக்கினை மையப்படுத்தி ஒருவரை போட்டியிடச் செய்வதற்கு முயற்சிக்கப்படுகின்றது. என்னைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கில் அறுபது சதவீதமான வாக்குகளைப் பெறவல்ல ஒருவர் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை என்றே கருதுகின்றேன் - என்றார்.

## வளிமண்டலவியல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தும் செயற்பாடுகளுக்கான பேச்சுக்களில் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளோம். ஜூன் இறுதியில் அல்லது ஜூலை முற்பகுதியில் அதனை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அதேநேரம் எமது வளிமண்டலத்திணைக்களத்தின் தொழில்நுட்பப் பிரிவினை எடுத்துக் கொண்டால் அது மிகவும் பின்னடைந்த நிலையிலேயே உள்ளது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு வளிமண்டலவியல் திணைக்களம் எமக்கு ஆதரவினை வழங்க வேண்டும். அவர்கள் ஒரு இடத்தில் முடங்கியுள்ளனர். கிணற்றுத் தவளைகள் போன்று ஒரு இடத்தில் முடங்கியிருந்து இத்தகைய பணிகளை முன்னெடுக்க முடியாது என்பதை அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

எமக்கு புதிய தொழில்நுட்பத்தினை பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தினை அபிவிருத்தி செய்வதற்கு நாம் உலக வங்கியிடம் கடனைப் பெற்றுள்ளோம். அந்தச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப் படுகின்றன - என்றார்.

## தயார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனர்த்தங்களால் பாதிக்கப் பட்டோருக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான நிதியை விடுவிக்க தயாரென நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரி மாணவனுக்குக் கௌரவிப்பு



கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் மாணவன் ரி.நிர்மலன் கணித பாடத்தில் 3ஏ தர சித்திகளை பெற்றுள்ளார்.

மேற்படி மாணவன் அகில இலங்கை ரீதியில் 13 ஆவது இடத்தையும் மாவட்ட ரீதியில் முதலாவது இடத்தையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில், மாணவனை புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பெற்றோர் அமைப்பினரும் பாடசாலை சமூகமும் இணைந்து கௌரவித்துள்ளனர். (05)



# கட்டுநாயக்க வந்த விமானங்கள் சீரற்ற காலநிலையால் திருப்பின

சீரற்ற காலநிலை காரணமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த இரண்டு விமானங்கள் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிங்கப்பூரில் இருந்து வந்த சிறிலங்கன் ஏர்லைன்ஸ் விமானம், யுஎல் 309 மற்றும் அபுதாபியில் இருந்து வந்த விமானம், கட்டுநாயக்கவைச் சுற்றியுள்ள பாதகமான வானிலையால் மத்தள விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்ட சிங்கப்பூரில் இருந்து வந்த யுஎல். 309 சிறிலங்கா ஏர்லைன்ஸ் விமானத்தை மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டுவருவதற்காக, கொழும்பில் இருந்து மத்தளைக்கு புதிய பணியாளர்களை சிறிலங்கா ஏர்லைன்ஸ் அனுப்பியுள்ளது.

சீரற்ற காலநிலையால் பொது போக்குவரத்துக்களும் பாதிப்படைந்துள்ளமையால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 10 பெண்கள் உட்பட 740 பேர் போதைப்பொருள்களுடன் கைது

நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப்பொருள்களுடன் 10 பெண்கள் உட்பட 740 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 34 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ள 6 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 146 கிராம் ஹெரோயின், 202 கிராம் ஐஸ், 203 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

# சிறுபான்மையினர் வாக்குகளுக்கு பெறுமதிவேண்டுமானால் தேசிய கட்சியொன்றின் வேட்பாளரை ஆதரிக்க வேண்டும்

## ரிஷாத் பதியூதீன் அறிவுறுத்து



26 சதவீதமாக உள்ள சிறுபான்மையினரின் வாக்குகள் பெறுமதிமிக்க வாக்குகளாக மாற்றப்பட வேண்டுமானால், தேசிய ரீதியாக உள்ள தேசிய கட்சியொன்றின் வேட்பாளரை ஆதரிப்பதன் ஊடாக மாத்திரமே பயனடையலாம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.

மாளிகைக்காடு பாவா மண்டபத்தில் நடைபெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் மையோன் முஸ்தபாவின் மகனும் அவரது ஆதரவாளர்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்த நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

சிறுபான்மைசமூகம் இந்தநாட்டிலே தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழர் என்று 26 சதவீதம் வாழ்கின்றோம். இந்த 26 சதவீதமாகவுள்ள சிறுபான்மையினரின் வாக்குகள் பெறுமதிமிக்க வாக்குகளாக மாற்றப்பட வேண்டுமாக இருந்தால் தேசிய ரீதியாகவுள்ள தேசியக் கட்சி ஒன்றின் வேட்பாளரை ஆதரிப்பதன் ஊடாக மாத்திரம்தான் ஒரு பயனை அடையலாம்.

இல்லையென்றால், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்து சிறுபான்மையினரின் வாக்குகள் இல்லாமல் நான் ஜனாதிபதியாக வந்தேன் என்று மார்பு தட்டிப் பேசினாரோ, ஓர் இனவாதியாக செயற்பட்டாரோ அவ்வாறு இன்னுமொரு ஜனாதிபதி இந்த நாட்டில் உருவாகிவிடக் கூடாதென்றால் சிறுபான்மைச் சமூகம் எல்லோரும் ஒன்றுபட்டு தேசிய கட்சியில் போட்டியிடக்கூடிய பொது வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதன் ஊடாக மாத்தரம்தான் நன்மைகளை அடைய முடியுமே ஒளிய, நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் பிரிந்து நின்று செயற்பட்டுக்கொண்டிருக்கும் நாம் ஒன்றுபட்டு ஒரு பொது வேட்பாளரை ஆதரிப்பது என்பது சாத்தியமற்ற ஒன்றல்ல.

ஆதலால், எமது காலத்தை வீணடித்து சிறுபான்மை இனங்களின் பொது வேட்பாளர் என்று எமது மக்களின் வாக்குகளின் பெறுமதியை இல்லாமற்செய்கின்ற பிழையான முடிவாக போய்விடும்.

இவ்வாறு இருக்கின்ற நிலையில் சிறுபான்மை இனங்களின் பொது வேட்பாளர் வெற்றி பெற முடியாது என்பதற்கு காரணம் இருக்கின்ற நிலையில் அந்த வேட்பாளர் வடக்கா, கிழக்கா, தெற்கா என்று பேசிக்கொள்வதில் பயனடைய முடியாது. - என்றார்.(05)

# நீர் கொழும்பில் இடம்பெறும் தேசிய போட்டிக்கு அழைத்துச்செல்லப்படாத கிளிநொச்சி வீரர்கள்

## நிதி இன்மை காரணமாம்

இருவர் பங்குபற்றும் கடற்கரை கைப்பந்து தேசிய போட்டிக்கு கிளிநொச்சி வீரர்கள் இருவர் அழைத்துச் செல்லப்படமை சமூகத்தில் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது.

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த புதிய பாரதி விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த இரண்டு வீரர்கள் கரைச்சி பிரதேச செயலக பிரிவு, கிளிநொச்சி மாவட்டம், வடக்கு மாகாண மட்டங்களில் மேற்படி போட்டிகளில் பங்குகொண்டு வெற்றியீட்டியுள்ளனர்.

இவர்களுக்கான தேசிய போட்டி நீர்கொழும்பில் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்கள் இடம் பெறுகிறது. இந்தப்போட்டிக்கு கிளிநொச்சியிலிருந்து முதன் முதலாக மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் பங்குபற்ற வேண்டும். ஆனால் அவர்கள் உரிய அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படவில்லை.

எனவே ஏன் தேசிய போட்டிக்கு அழைத்துச் செல்லப்படவில்லை என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலரிடம் வினவிய போது நீர்கொழும்பில் மூன்று நாள்கள் தங்கயிருக்க வேண்டும். ஒரு நாள் தங்குமிட செலவு 8500 ரூபா தேவைப் படுகிறது. ஆனால் குறித்த நிதி வசதி ஏற்பாடு செய்துதரப்பட வில்லை இதன் காரணமாக தேசிய போட்டிக்கு வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு வீரர்களை அழைத்துச் செல்ல முடியாது போய்விட்டது எனத் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தேசிய போட்டிக்குச் செல்வது என்பதே சாதனைக்குரிய விடயம் இந்த நிலையில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கடற்கரை கைபந்து போட்டிக்கு வீரர்களை அழைத்துச் செல்லப்படாமை மக்கள் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு தாங்கள் குறித்த போட்டியில் சிறப்பாக விளையாடி வரும் அணி என்றும் ஆனால் தொடர்ச்சியாக பாரபட்சத்திற்குள்ளாக்கப்பட்டு வருகின்றோம். பல்வேறு நெருக்கடிகள் எம்மீது மேற்கொள்ளப்படுகிறது. எமது அணியில் விளையாடுகின்ற வீரர் ஒருவர் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைகழகத்தில் விளையாட்டு முகாமைத்துவத்தில் கற்கும் மாணவன் பல்கலைக் கழகத்தில் பல விளையாட்டுகளில் பங்குபற்றி ஏராளமான சான்றிதழ்கள், பதக்கங்களையும் வென்றவர்.

அவருடன் பல்கலை கழகத்தில் விளையாடியவர்களே ஏனைய மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்றனர் எனவும் அவர் கள் கவலை தெரிவித்துள்ளனர்.(05)

## சட்டவிரோத மதுபானம்: ராகமவில் ஒருவர் கைது

ராகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார் எனராகமபொலிஸார்தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தானைபிரதேசத்தைச்சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறுகைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 15 லீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் 1,481 லீற்றர் கோடா உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைராகமபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## கிருமி தொற்றால் பெண் உயிரிழப்பு

### யாழில் சம்பவம்

கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி, புலோலி வட மேற்கைச் சேர்ந்த 57 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

குடும்பப்பெண்ணுக்கு சனிக்கிழமை சிறுநீர் அடைப்பு ஏற்பட்டு அவதியுற்று மயக்கமடைந்துள்ளார்.

இதையடுத்து, அவரை பருத்தித்துறைஆதாரவைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது, ஏற்கனவே அந்த பெண் உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவருக்கு ஈரல் பாதிப்படைந்து அதன் மூலம் கிருமித் தொற்று ஏற்பட்டு, உயிரிழந்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (05)

## காசோலையினூடாக யாழில் பண மோசடி

### இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் நிறப்பூச்சுகள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றில் பொருள்களைக் கொள்வனவு செய்தபின்னர், காசோலையை கொடுத்து ஏமாற்றிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவை சேர்ந்த இருவரே நிறுவனத்திடம் 11 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்தபின்னர், காசோலையை வழங்கியுள்ளனர்.

இந்த காசோலையைக் கொண்டு வங்கியில் வைப்பு செய்ய முற்பட்டபோதே அந்த வங்கிக்கணக்கில் பணம் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

பின்னர், நிறப்பூச்சு நிறுவனத்தினர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையை அடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காசோலை மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில்இருவரைகைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை நடத்தியுள்ளனர். (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.06.2024இல் வெளியிடப்பெற்றது